செய்தி வெளியீடு எண் : 14 நாள் : 03.01.2024

**தமிழ்நாடு அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் பொதுமக்களிடம் உடனுக்குடன் சென்றடைய வேண்டும் – செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் அறிவுரை**

-----

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (3.1.2024) சென்னை கலைவாணர்அரங்கத்தில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்பான அறிவிப்புகளில் நிலுவையில் உள்ள அறிவிப்புகள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிலுவையில் உள்ள அறிவிப்புகள், தமிழரசு மாத இதழ் சந்தா அதிகரித்தல் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் கள விளம்பரம் தொடர்பான தர மதிப்பீடு ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையுரை ஆற்றியபோது, "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நம்முடைய துறையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றோம். அதுபோல தமிழரசு மூலம் பல்வேறு மலர்களை வெளியிட்டிருகின்றோம். இவ்வளவு மகத்தான பணியை நாம் செய்திருக்கின்றோம் என்றால், நீங்கள் அனைவரும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி இருக்கின்றீர்கள். செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசினுடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் மக்களிடம் எடுத்துச் செல்கின்ற மகத்தான பணியைச் செய்கின்ற துறை. சுதந்திரப் போராட்டத் தியாகிகள், தமிழ் மொழிக்காவலர்கள், இந்த நாட்டுக்காக. மக்களுக்காக உழைத்த தலைவர்களுக்கு ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள சிலைகள் மற்றும் அரங்கங்களை நாம் பராமரித்து வருகின்றோம். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புதிதாக அறிவிக்கப்பட்ட சிலைகளையும் அரங்கங்களையும் உருவாக்கி வருகிறோம்.

அரசினால் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை உதாரணமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம் முதலியவைகளில் மக்கள் பயன்பெறத் தேவையான தகுதிகள் குறித்து பதாகைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு விளக்கமாகத் தெரிவித்து பயன்பெறச் செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து தமிழரசு மாத இதழ் ஆயுள் சந்தாவை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த

அரசுபொறுப்பேற்ற போது தமிழரசு மாத இதழ் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 32,000–ஆக இருந்தது. தற்போது 1,18,000–ஆக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டிற்கான இலக்கு 1,50,000 ஆக நிர்ணயிக்கப்பட்டு அதனடிப்படையில், மாவட்டங்களுக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகள், ஒப்பந்தாரர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அணுகி ஒவ்வொருவரும் தங்கள் மாவட்டத்திற்கான இலக்கை எட்ட வேண்டும்.

குடியரசு தினம் வரவிருப்பதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தங்கள் மாவட்டங்களிலுள்ள சிலைகள், அரங்கங்கள், நினைவகங்கள், ஆகியவற்றை தூய்மை செய்து சிலைகளுக்கு மாலை அணிவித்து, வண்ண விளக்குகளால் அலங்கரிக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிலைகள் குறித்த விவரங்களை துலங்கல் குறியீட்டு (QR Code) மூலம் மக்கள் அறியும் விதமாக, சோதனை அடிப்படையில் சென்னையில் உள்ள திருவள்ளுவர் சிலை குறித்த துலங்கல் குறியீடு உருவாக்கப்பட்டு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, தற்போது இணையதளத்தில் ஏற்றப்பட்டு பொதுமக்கள் துலங்கல் குறியீட்டை (QR Code) பயன்படுத்தி வருகின்றனர். இதனைப் பொதுமக்கள் மிகவும் பாராட்டுகின்றனர். இந்த மாத இறுதிக்குள் அனைத்துச் சிலைகளின் விவரங்கள் குறித்து துலங்கள் குறியீடு உருவாக்கும் பணியை முடிக்க வேண்டும்.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களைச் சென்றடையும் வகையில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் முதற்கட்டமாக முக்கிய 10 பேருந்து நிலையங்களில் மின் சுவர்கள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், மதுரை ஆகிய பேருந்து நிலையங்களில் மின்சுவர்கள் அமைக்கப்பட்டு, துவக்கி வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கும்பகோணம், திருச்சி, தாம்பரம், திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், திண்டுக்கல் ஆகிய பேருந்து நிலையங்களில் மின்சுவர் அமைக்கும் பணிகளை விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரும் 6–ஆம் தேதி திரைத்துறையினரால் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நடத்தப்பட உள்ளது. அதற்கு வேண்டிய உதவிகளை நம் துறை செய்ய வேண்டும்.

சங்கமம் நிகழ்ச்சி சென்னை மட்டுமல்லாமல், காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சி நன்றாக நடைபெற நம் துறை அலுவலர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் தற்போது மக்கள் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு வரும் அரங்கங்களில் தரைத்தளத்தை உயரமாகவும், தரமாகவும், விரைவாகவும் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசின் மீதான உண்மைக்கு மாறான செய்திகள் வரும்பொழுது அதற்கு மறுப்பு தெரிவித்து உண்மையான செய்தியினை நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

அரசின் திட்டங்களை மக்கள் அறியும் வண்ணம், மாவட்ட ஆட்சியர் மூலம் செய்தியாளர்களுடன் பயணம் மேற்கொண்டு அத்திட்டம் குறித்து செய்தியாளர்களிடம் விவரித்து பத்திரிகைகளில் செய்திகள் வெளிவரச் செய்து, அத்திட்டங்கள் பற்றி, மக்கள் அறிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள **"மக்களுடன் முதல்வர்"** திட்டத்தின் நோக்கத்தையும், நடைபெறும் முகாம்கள், அம்முகாம்களில் பொதுமக்களின் குறைகள் எவ்வாறு தீர்வு காணப்படுகிறது என்பதையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்த்துப் பயன்பெறச் செய்ய வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரங்கங்கள், நினைவகங்கள் ஆகியவை குறித்த பெயர்ப் பலகைகளை சாலைகளில் அவற்றின் அருகிலேயே வைக்காமல், பயணம் செய்வோர் கவனிக்கும் வகையில் சாலையில் சிறிது தூரத்திற்கு முன்பாகவே பெரிய அளவில் வைக்க வேண்டும். அத்துடன் அவை அமைந்துள்ள சாலையின் இருபுறங்களிலும் இரவு நேரத்திலும் தெரியும் வண்ணம் அவற்றின் புகைப்படங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் பெயர்ப் பலகைகளை அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் வழியில் செல்பவர்கள் நினைவகங்கள் இருக்கும் இடத்தைக் கடந்து செல்வதற்கு முன்னதாகவே அறிந்து அவற்றைப் பார்க்க விரும்புவார்கள்.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், மாவட்டங்களில் ஏதாவது பிரச்சினை எழும்போது, அதை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துச் சென்று, பிரச்சினைக்குச் சுமூகத் தீர்வு காண வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலுவலர்கள் அரசுக்கும்–மக்களுக்கும் பாலமாகச் செயல்பட வேண்டும் என்றார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையாற்றினார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (செய்தி), திரு. ச.செல்வராஜ், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், மாநகராட்சி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், பொதுப்பணித்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in